23.04.2024

அ.வ.எண்.11/2023

துரைராஜ் (P.W.1)

குறுக்கு விசாரணை :

1. நான் தாக்கல் செய்த எத்தனை வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் என்றால் 2 வழக்குகள் உள்ளது. பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்ட இடத்தில் கிணறு ஒன்று உள்ளது. அதில் 2020 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் 1-ஆம் பிரதிவாதியின் அனுமதியுடன் நான் தண்ணீர் எடுத்தேன் என்றால் இல்லை. மேற்படி கிணற்றில் 1-ஆம் பிரதிவாதி தண்ணீர் எடுக்க என்னை அனுமதித்தார் என்றாலும் மேற்படி அனுமதியின் பெயரில் நான் மேற்படி தேதியில் தண்ணீரை எடுத்துக்கொண்டு அவரது சொத்தை சுற்றி வந்து தண்ணீர் எடுத்து வந்தேன் என்றாலும் ஆனால் 4-வது நாள் அவரது கண்டத்தில் இருந்த வேலியை நீக்கிவிட்டு தண்ணீர் எடுத்ததால் தான் என்னை அவர் தண்ணீர் எடுக்ககூடாது என்று கூறிவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு பிரதிவாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் அடிப்படையில் விசாரணைக்கு ஆஜரான நான் கல்குளம் சர்வேயரை வைத்து என்னுடைய நிலத்தை அளந்து கொள்கிறேன் என்று கூறினேன் என்றும் அதற்கு 1-ஆம் பிரதிவாதி சம்மதித்தால் மேற்படி புகார் முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் யாரும் என்னிடம் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் பெற்றுகொள்ளுமாறு கூறவில்லை என்றால் சரிதான்.